1990 ஏப்ரல் 20]

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(ஈ) கோரிக்கை எண் 55—சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு.

திருவாளர்கள் கே. ரவி அருணன் உ. ரா. வரதராசன் மற்றும் எஸ். டி. உகம்சந்த் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண். 55—சாலைப் போக்கு வரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு—என்ற தலைப்பின் கீழ் ரூ. 49,53,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (21—4—1990) காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 15.27 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

8 பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

66. சென்னை, அடையாறில் உள்ள காது கேளாதோர் மற்றும் பார்வையற்றோருக்காக நடத்தி வரும் புனித லூயிஸ் நிலையத்தாருக்குச் சொந்தமான டி. எஸ். ஏ. 763 ஆம் எண் கொண்ட இயக்கூர்திக்கு சலுகை முறையில் வரிவிதிப்பது குறித்து உள் (போ. 1) துறையின் 12—12—1989ஆம் நாளிட்ட 2693ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1974ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் மீதான வரிவிதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்ப்பெற்றது.]

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS